# சைப்பிரஸில் ராணுவப் புரட்சியால் பதட்ட நிலை

விலை சதம் 25 Registered as a Newspaper at Sri Lanka ★ ★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 153

யாழ்ப்பாணம் ஆனி 32 ஜ. ஆகிர் 25 செவ்வாய்க்கிழமை 16-7-74

## ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் கொல்லப்பட்டாரா?

### ஊர்ஜிதம் இல்லை

நிக்கோஷியா, ஜூலை 15

சைப்பிரஸில் தேசியகாவல் படையினர் என்ற ராணுவப்பிரிவு நடத்திய புரட்சியின் பின்னர் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியஸ் கொல்லப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய காவல்படையினர் வானொலி மூலம் விடுத்த அறிக்கையொன்றில் நாட்டின் கட்டுப்பாடு முழுவதும் தம்வசம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. வெளி நாடுகளுடனான சகல தொலைபேசித் தந்தித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. விமானபோக்குவரத்துச்சேவைகளும் முற்றாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் அதேசமயம் துருக்கி வானொலி நிலையம் சைப்பிரஸில் பதட்ட நிலை பரவிவருவதாகவும் அதிபர் மாக்கோரியஸினது அரண்மனை பீரங்கிப்படைகளால் முற்றுகையிடப்பட்டு கடும் சமர் தொடர்வதாகவும் அதிபர் மாக்காரியஸ் உயிருடன் இருப்பதாகவும் செய்தி [illegible]

சைப்பிரஸில் தலைநகரான நிக்கோஷியாவிற்கு அண்மையிலுள்ள இருநகரங்கள் போர் நடவடிக்கைகள் பரவாமல் தமது நாட்டிற்கானபலத்தை அதிகரித்து உஷார் நிலையிலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல காலமாக கிரேக்கத்திற்கும் துருக்கிக்கும் இருந்து வந்த மோதல்களினால் 1960-ம் ஆண்டில் சைப்பிரஸ்

[4-ம் பக்கம் பார்க்க]

# குறையிருந்தாலும் வளாகம் வரட்டும்

## யாழ். மாநகர வெள்ளி விழாவில் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் அமைக்க அரசு தீர்மானித்திருக்கும் பல்கலைக்கழக வளாகம் பூரணத்துவமுடைய சகல தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய ஒன்றாக இருக்குமென்று ஆரம்பத்தில் எதிர்பார்க்க முடியாது. இந்த வளாகத்திலும் குறைகள் இருக்கலாம். ஆனால் பின்னர் சகல தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய ஒரு பெரிய வளாகமாக அமையுமென்று எதிர்பார்த்து இந்த வளாகத்தை அமைப்பதில் சகலரும் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும்.

என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்று முன்தினம் இரவு யாழ் மாநகர சபை வெள்ளிவிழா இறுதி நாள் நிகழ்ச்சிகளின் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும் இந்த முன்னேற்றத்தில் யாழ். மாநகரசபையும் மேயர் துரையப்பாவும் செய்த சேவைகளையும் பாராட்டிப் பேசிய திரு. விமல் அமரசேகரா யாழ். நகரில் புதிதாகத் தமிழ் அறிஞர்களுக்கும் சாந்திமகாளுக்கும் சிலை வைக்கப்பட்டுள்ளதையும் பாராட்டினார்!

### கச்சதீவு:

### தி. மு. க. கண்டனம்

சென்னை, ஜூலை 15

கச்சதீவை இலங்கைக்கு உரிமையாக்கும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக நேற்று தமிழ்நாடு முழுவதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனக் கூட்டங்களை நடத்தியது.

கும்பகோணத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் கலந்து கொண்டு பேசினார்.

## "யாழ். நகரமே சுத்தமான நகரம்"

ஆனைக்கோட்டை, செவ்.

யாழ். மாநகரசபை மக்களுக்கு பல நன்மைகளை செய்து வருகின்றது. யாழ். மேயர் திரு துரையப்பா மக்களுக்கு பல நன்மைகளைச் செய்து வருகின்றார். அவரின் பேரில் விளையாட்டு அரங்கு ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கு இளைஞர்களுக்கு விளையாட்டில் ஊக்கமளித்து வருகிறது.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற்ற வெள்ளி விழா பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்- அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கூறினார்.

யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:- யாழ். மாநகரமன்றத்தின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். அதில் அல்பிரட் துரையப்பா மக்களுக்கு பல நன்மைகளை செய்துள்ளார் என்பதை அறியக் கூடியதாக இருந்தது இப்படியான செய்தியை நான் மாத்திரம் கூறவில்லை. அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவே கூறியுள்ளார்.

இலங்கையில் நான் பல இடங்களுக்கும் சென்று இருக்கிறேன். [illegible] [illegible] பார்த்ததில்லை.

இதற்கு காரணம் யாழ்



யாழ். மாநகர சபை வெள்ளிவிழா பொருட்காட்சியின் விவசாயப் பகுதியை பொது நிர்வாக, உள்ளூராட்சி நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா பார்வையிடுகையில் எடுத்த படம். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, [illegible] விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சத்தியானந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ந)

## தருமபுரம் கொலை வழக்கு: எதிரிக்கு 5 வருடம் கடூழியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தருமபுரம் கொலை வழக்கில் எதிரிக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதவான் திரு ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 73ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி தருமபுரத்தை சேர்ந்த நாராயணசாமி கிருஷ்ணசாமி என்பவர், வெள்ளைச்சாமி வீரசாமி என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி மனிதப்படுகொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எம் சபாரத்தினம் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார். (ந)

### பொலிஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மாநகர சபை வெள்ளிவிழாவையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளின்போது திறந்த வெளி அரங்குக்குள் நுழைந்த பலரது உடைமைகளை பொலிசார் சோதனையிட்ட பின்னரே அனுமதித்தனர் என்று நேற்று 'ஈழநாடு' பத்திரிகைச் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டிருப்பதை பொலிஸ் அதிபர் திரு. எஸ். சந்திரசேகரா மறுத்தனர். அன்றைய தினம் பொலிசார் திறந்தவெளியரங்கின் வெளிப்பகுதியில் போக்குவரத்துக்களை சீர்படுத்துவதிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் மாத்திரமே ஈடுபட்டிருந்தனர் என்று திரு. சந்திரசேகரா தெரிவித்தனர்.

மேயரும் மேயருடன் அவரது பாரியார் பரமேஸ்வரி துரையப்பாவும் சேர்ந்து கடமையாற்றுவதினாலேயே இப்படி சுத்தமாய் இருக்கின்றது.

மக்கள் அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு பல நன்மைகளைச் செய்யவிருக்கிறது. செய்து வருகிறது. மிகவிரைவில் வடபகுதி மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வளாகமொன்றை அமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. இதன் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### காமராஜருக்கு 72 பூர்த்தி

சென்னை, ஜூலை 15

ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜர் தமிழகத்திலுள்ள தனதில்லத்தில் 72-வது பிறந்த தினத்தை அமைதியான முறையில் கொண்டாடினார். நண்பர்களும் ஆதரவாளர்களும் பெருந்திரளாக சமூகமளித்து அவருக்கு ஆசி கூறியுள்ளார்கள்.

தமது பிறந்ததினச்செய்தியில் மக்களுக்கு திரு. காமராஜர் தெரிவித்ததாவது:

அபரிதமான விலைவாசி உயர்வினால் மத்தியவகுப்பு மக்களும் ஏழை மக்களும் மிகவும் இன்னல்படுகிறார்கள் இந்த நிலை மாறி சகலரும் சுகமும் இலகுவாகப் பெறவேண்டிய சூழ்நிலை உருவாகவேண்டும். மொழிவெறியால் பாமர மக்களது வாழ்வு சின்னாபின்னப்படாமல் தவிர்க்க வழிகோலப்பட வேண்டும். தமிழக மக்கள் தம்மிடமுள்ள நல்லபெயரை காப்பாற்ற வேண்டும் என்றும் சிறுபான்மை மக்களை பாதுகாக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

பிரமுகர்கள் பலர் தொலைபேசி மூலம் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

### காங்கிரஸுடன் இணைய முடிவு

புதுடில்லி, ஜூலை 15

மணிப்பூர் மாநில மக்கள் கட்சி காங்கிரஸ் கட்சியுடன் இணைவதற்கு முடிவு செய்துள்ளது. மேற்படி கட்சியின் நிர்வாகக் கமிட்டி நேற்று இதுபற்றி முடிவுசெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வி

நீங்கள் எங்கு வசித்தாலும் அநுபவமும், ஆற்றலுமுடைய ஆசிரியர்களிடம் தபால் மூலம் கல்வி பயிலுங்கள். விபரங்களுக்கு எழுதுக. றெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 285

### விற்பனைக்கு

அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு இருக்கின்றன. விலை ரூபா 75. திருமதி பத்மநாதன், 7-ம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். 358

கன்னாகம் சந்தைக்கு அருகாமையில் முத்துக்கிருஷ்ணன் ஒழுங்கையில் 5 பரப்பு காலையக்கட்டி என்னும் காணி இரண்டு துண்டுகளாகவும் விற்பனைக்குண்டு. பிரஜ்ஞன் என்ரப் பிறைசஸ் 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரிக்கு முன்பாக இருக்கும் 'உமாபவனம்' என்னும் வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். பொ. முத்துக்குமாரசாமிக் குருக்கள், 38, இராமநாதன் வீதி, கொழும்பு-13. 357

ஜி. சி. ஈ. வகுப்பு தூய கணிதம் II 1968—1972 வினாக்கள் மாதிரி விடைகள் விலை 3 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 325

### தேவை

அனுபவமுள்ள உணவு பரிமாறுபவர், சமையல் உதவியாளர். நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 'யாழ். இன்' முத்திரைச் சந்தை, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 359

யாழ். வைத்திய நிலையம் ஒன்றிற்கு தயாரித்த மருந்துகளும், உணவு வகைகளும் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் (இருபாலாரும்) தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 360 C/o. ஈழநாடு லிமிட், த. பெ. எண். 49, யாழ்ப்பாணம். 360

## கல்வி அமைச்சுக்கு ஆட்சேபக் கடிதம்

புங்குடுதீவு, திங்கள்

"கடந்த சனிக்கிழமை கல்வியமைச்சினுல் நடாத்தப்பட்ட 5-ம் 7-ம் வகுப்புகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கு மேற்பார்வையாளராகவும், நோக்குனர்களாகவும் சேவைக்கமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் பாதிய அவகாசமின்றியும் எவ்வித வசதியுமில்லாமலும் அழைக்கப்பட்டுள்ளார்கள். எங்கள் சங்க விதிகளுக்கமைய விடுதலை நாட்களில் வேலைக்கமர்த்தப்படும் இடத்து அவ்வாசிரியர்களுக்கு அதற்கென ஊதியமும், பிரயாணச் செலவும் வழங்கப்படல் வேண்டும். அன்று வேலை செய்யும் ஆளுக்குப் பதிலாகப் பிறிதொரு நாள் லீவு வழங்கப்படல் வேண்டும். இவை தவிர்க்கப்பட்டமையை எமது ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது" இவ்வாறு கூறும் ஆட்சேபக் கடிதமொன்றை கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கும், பரீட்சை ஆணையாளருக்கும் அனுப்பிவைத்துள்ளார் வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம். வடமாநில வித்தியாதிபதியினூடாக இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஈ)

## லெபனுன் எல்லையில் இஸ்ரேல் பீரங்கித் தாக்கு!

கெய்ரோ, ஜூலை. 15

லெபனுன் எல்லையோரப் பகுதியில் இஸ்ரேலிய பீரங்கிப்படைகள் குண்டுமாரி பொழிந்துள்ளன. ஆனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. பாலஸ்தீன கொரில்லா நிலைகள் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

### சோவியத் கப்பல்கள்

சூயஸ்கால்வாயில் போடப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு உதவுவதற்காக ஆறு கண்ணி அகற்றும் சோவியத் கப்பல்கள் எகிப்திய துறைமுகம் ஒன்றுக்கு சேர்ந்துள்ளன. வந்து ஆகஸ்ட் மாத கடைசிய பகுதியில் சூயஸ்கால்வாய் போக்குவரத்துக்கு ஆயத்தமாகிவிடும் என்று தெரிகின்றது.

### முத்தையன்கட்டில் சிரமதானம்

மீசாலை, திங்கள்

முத்தையன் கட்டு வலதுகரை குடியேற்ற வாசிகளுக்கும் படித்த வாலிபருக்கும் பயன்படும் வகையில் முத்தையன் கட்டுப் பிரதான வாய்க்கால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள குளத்தின் நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டதைத் தொடர்ந்து உள்ள நீரை கவனமாகப் பாவித்து நாட்டப்பட்டுள்ள பயிர்வகைகளைப் பேணும் பொருட்டு வவுனியா மேலதிக அரசாங்க அதிபரும் நிர்மாணப் பொறியியலாளரும் எடுத்துக் கொண்ட ஏற்பாடுகள் மூலம் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (அ)

### அஞ்சும் நிலையில் பாலம்

அரியாலை, திங்கள்

நாயன்மார்கட்டு ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள பாலத்தின் அடியில் உள்ள இரும்புக் கேடர்கள் உடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனுல் வாகனங்கள் செல்வதில் பெரிதும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (அ)

### புதிய சமாதான நீதிபதி

மீசாலை, திங்கள்

மிருசுவில் கிராமசபைக்குரிய இணக்கசபைத் தலைவரான ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. வேலுப்பிள்ளை கந்தையா சமாதான நீதவானுக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டார். இவர் ஒட்டுவெளி பராசக்தி சனசமூக நிலையம் எழுதுமட்டுவாள் பயிர் செய்கைக் குழு என்பவற்றின் காரியதரிசியும் ஒட்டுவெளி பராசக்தி கலைக்கழக தலைவருமாவார். (க)

### ஆதரவு யாருக்கு?

சென்னை, ஜூலை 15

பாரதத்தில் நடைபெறவிருக்கும் ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி தேர்தல்களில் யாரை ஆதரிப்பது என்ற பிரச்சினையை திராவிடமுன்னேற்றக்கழகம் விரைவில் தனது தோழமைக்கட்சிகளுடன் ஆராயும் என தமிழக முதல்வர் தெரிவித்தார்.

## நிக்ஸன் தாமே பொறுப்பேற்ருர்

வாஷிங்டன், ஜூலை 15

1969-71-ம் ஆண்டுகளில் சில அதிகாரிகளின் சம்பாஷணைகள் ஒற்றுக் கேட்கப்பட்டதற்கு தாமே பொறுப்பு என்று அதிபர் நிக்ஸன் ஒப்புக் கொண்டிருக்கிருர்.

வெளிஉறவு அமைச்சர் டாக்டர் கிஸிங்கரை இப்பிரச்சினையிலிருந்து அதிபர் இவ் வறிவித்தல் மூலம் விடுத்திருக்கிருர். நாட்டின் பந்தோபஸ்தை உத்தேசித்து இந்த ஒற்றுக் கேட்டலுக்கு தாமே உத்தரவிட்டதாக அதிபர் கூறியிருக்கிருர்.

இதுபற்றி விசாரித்துவரும் செனட் சபையின் வெளிவிவகார கமிட்டியின் தலைவருக்கு அனுப்பிய குறிப்பிலேயே திரு. நிக்ஸன் இதைத் தெரிவித்திருக்கிருர்.

### சூ என் லாய் குணமடைகிருர்

ஹொங்கொங், ஜூலை 15

சுகவீனமுற்றிருந்த சீனப் பிரதமர் சூ என் லாய் இப்பொழுது குணமடைந்து வருகிருர். 76 வயதான திரு. சூ என் லாய் இருதய நோய் கண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதே சமயம் லாவோஸ் தலைவர் இளவரசர் சுவன்ன பூமா இலேசான இருதய நோயினுல் பாதிக்கப்பட்டு குணமடைந்து வருவதாக வியன்டியான் செய்திவொன்று கூறுகின்றது.

### குண்டுவீச்சுக்கு 14 பேர் பலி

சைகோன், ஜூலை 15

தென் வியட்னுமில் விடுதலை முன்னணி படைகள் நேற்று நடத்திய குண்டு தாக்குதல் ஒன்றில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 67 பேர் காயமுற்றனர்.

செனட் சபைக்கு நடைபெறும் தேர்தலை முறியடிப்பதற்காகவிடுதலை முன்னணியினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களாம்.

### தேங்காய் டின்பால்

கொழும்பு, திங்கள்

டின்களில் அடைக்கப்பட்ட தேங்காய்ப்பாலை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

தேங்காய்ப்பாலை டின்களில் அடைக்கும் வேலைகள் இலங்கைப் பல்கலைக் கழக விஞ்ஞானப் பகுதியினரின் உதவியுடன் தெங்குப் பொருள் உற்பத்தி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

### தமிழ் வாலிபர் பிரச்னை

### வட்டு. எம். பி. மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ் இளைஞர்களின் எதிர்காலப் பிரச்னைகள், குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு மகாநாடு ஒன்றினைக் கூட்டுவதற்கான முயற்சிகளை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா மேற்கொண்டுவருகிருர்.

உத்தேச மகாநாடு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் இம்மகாநாட்டில் அரசியல் வாதிகள், கல்விமான்கள், பொருளாதார நிபுணர்கள், வாலிபர் இயக்கத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்வர் என்றும் திரு. தியாகராசா தெரிவித்தார்.

### பாராட்டி உபசரித்தனர்

கொழும்பு, திங்கள்

"துணிச்சலும் வீரமும் நிறைந்தவர்களாக பெண்கள் விளங்கவேண்டும். சட்டக்கல்லூரி மாணவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஏற்பட்ட சகல பிரச்சினைகளிலும் முன்னின்று மாணவர்களின் நலன் பேணுவதில் துணிச்சலுடன் ஈடுபட்டு அரியபல சாதனைகளை நிலைநாட்டியவர் செல்வி சிங்காரம்" என்று சட்டக்கல்லூரி இந்துமகாசபையின் முன்னுள் செயலாளர் செல்வி விஜயலட்சுமி சிங்காரம் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்ததைப் பாராட்டுமுகமாக கொழும்பு கிறவுண் ஹோட்டலில் சட்ட மாணவர்கள் அளித்தவிருந்துபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில் முன்னுள் செனட்டர் ஜனாப் மஷூர்மௌலாளு குறிப்பிட்டார்.

எழுத்தாளர் திரு கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருவாளர்கள் எஸ். கே. மகேந்திரன், என். ஸ்ரீகாந்தா, ந. ஜெகன்மோகன், எஸ். கே. மனோகரன், என். குலசேகரம், செல்வி மஞ்சுளா கந்தையா, என். அலோசியஸ் ஆகியோர் உட்படப்பல சட்ட மாணவர்கள் பாராட்டுரை வழங்கினர். (அ)

# என்ன

# ?



### இன்றைய பலன்

ஆனிமாதம் 32-ந் தி
(16-7-74)

மேஷம்: கடமை
மூலம் திறப்படைவீர்
மேலதிகாரிகளின் ஆத
தாராளமாகக் கிடை
செலவுகளைக்கட்டுப்ப
தவுக.

ரிஷபம்: பொருளீட்
தில் புதிய பாதை
வகுத்துக்கொள்ளுவீர்
கஷ்டங்கள் சில நீங
யாகும். திருப்திப்பான தி

மிதுனம்: இன்று அ
பொருளும் இணைந்து கி
கும். தொழில் புரியும்
தில் பாராட்டப்படுவீர்

கடகம்: சிந்தனை அ
லோர்தும் செய் தொழ
பதட்டநிலை தென்ப
அரசாமுடிவின் மூலம்
கேட்கநேரிடும்.

சிம்மம்: பொன்னை
தர்ப்பம் இன்று கிடை
திறமைக்குமுதலிடம் உ
பெரியவர்களின் ஆத
கிடைக்கும்.

கன்னி: புதுமை
எண்ணங்கள் தலைதூக்
புதிய அனுபவங்கள் கி
கும். புத்திரவழியால்
முண்டு. ஆனந்த நிலை.

துலாம்: தன தா
நஷ்டத்துடன் பூமிப்
தும் தோன்றும். வேல
வர் ஒருவரை பகை
கொள்ள நேரிடும்.

விருச்சிகம்: குடும்ப
அமைதியான சூழ்நிலை
படும். பிரம்மச்சாரிக
வாழ்வில்காதல் அரும்பும்
நாள்.

தனுசு: நண்பர்கள்
லியாலே நலிவுகள் தோ
கூடும். பண்புகள் ப
பேசும், பரதேசிக்கோ
கும்.

மகரம்: இதமான வ
இன்சொல். பெரியோ
ஆதரவு கிடைக்கவும் இ
தப்பாமல் கிட்டும்.
பக்தி மேலோங்கும்.

கும்பம்: வியாபார
இக்கட்டுமுண்டு. வெளி
தொடர்புகளில் முன்
றம் தென்படும் புதுமை
எண்ணங்கள் தலைதூக்கு

மீனம்: அதிர்ஷ்ட
தினம் எத்தொழிலைச்
தாலும் அதன் மூலம்
வருமானம் கிடைக்
பிள்ளைகளின் மூலம்
னேற்றமுண்டு.

சோதிடகலாநி
திருமலை க வேலுப்பி

### பஸ்நிலையத்திற்கு அண்மையில் விவசாயக்கந்தோ

யாழ்ப்பாணம்,

இதுவரை யாழ்ப்பா
கச்சேரி பஸ்நிலையத்தி
அண்மையில் இயங்கிவந்
சாயப்பண்ணைமுகாமை
பத்திநிலையம் கடந்த
திகதிமுதல் யாழ். பஸ்நி
திற்கு அருகாமையில்
பதிரிவீதியில்சங்கரப்பி
கட்டிடத்திற்கு மாற்றம்
யப்பட்டுள்ளது.

### எழுதுவினைஞ சங்க நிர்வாகி

யாழ்ப்பாணம்,

அரசாங்க எழுதுவின
சங்க 13-வது ஆ
பொதுக்கூட்டம் அ
யில் திரு. அ. புவனே
தலைமையில் நடைபெ
போது பின்வருவோர்
வாகிகளாகத் தெரிவு
யப்பட்டனர்.

தலைவர் திரு. இ.
நாதன், உபதலைவர்கள்
க. அந்தோனிப்பிள்ளை,
தேசரத்தினம், செயல
திரு. செ. கனரத்தி
துணைச்செயலாளர்
திருச்செல்வம் பொருள
திரு. க. உருத்திரன்.

செயற்குழு உறுப்
களாக 10 பேர் தெரிவு
யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றைய ... பலன்

...தம் 32-ந் திகதி (16-7-74)

...: கடமையில் ...தெப்படைவீர்கள். ...ரிகளின் ஆதரவு ...ாகக் கிடைக்கும் ...க்கட்டுப்படுத்...

...: பொருளீட்டுவ ...ிய பாதையை ...கொள்ளுவீர்கள். ...ர் சில நிவர்த்தி ...த்திப்பான தினம். ...: இன்று அருளும் ...் இணைந்து கிடைக் ...தொழில் புரியுமிடத் ...ாட்டப்படுவீர்கள். ...இந்த அலைகள் ...செய் தொழிலில் ...ல தென்படும். ...டிவின் மூலம் குறை ...ிடும்.

...பொன்னான சந் ...இன்று கிடைக்கும். ...முகவிடம் உண்டு. ...களின் ஆதரவு ...

...புதுமையான ...ள் தலைதூக்கும். ...பலன்கள் கிடைக் ...திரவழியால் புகழு ...ந்த நிலை.

...தனதானிய ...ன் பூமிப்பிணக் ...ன்றும். வேண்டிய ...வரை பகைத்துக் ...தேரிடும்.

...ம்: குடும்பத்தில் ...ன சூழ்நிலைதென் ...ிரக்பச்சாரிகளின் ...தல் அரும் புதுநல்ல

...நண்பர்கள் தொல் ...நலிவுகள் தோன்றக் ...ண்புகள் பறந்து ...ரதேசிக் கோலமா

...இதமான வாழ்வு ... பெரியோர்கள் ...இக்கட்டும் இன்று ...கிட்டும். இறை ...லாங்கும்.

...வியாபார விருத் ...டு. வெளியிடத் ...களில் முன்னேற் ...படும் புதுமையான ...ள் தலைதூக்கும்.

...அதிர்ஷ்டமான ...தொழிலைச் செய் ...ுதல் மூலம் தகுந்த ...கிடைக்கும் ...ன் மூலம் முன் ...டு.

...டைக்கலாநிதி ...வேலுப்பிள்ளை

...லயத்திற்கு ...மையில் ...யக்கந்தோர்

...ப்பாணம், செவ். ... யாழ்ப்பாணம் ...பஸ் நிலையத்திற்கு ...் இயங்கிவந்தவிவ ...ணைமுகாமை உத் ...ம் கடந்த 11-ம் ...யாழ். பஸ்நிலையத் ...காமையில் ஆன் ...பிள்சங்கரப்பிள்ளை ...க்கு மாற்றம்செய் ...ளது.

...ு வினைஞர் ...நிர்வாகிகள்

...ப்பாணம், செவ். ...எழுது வினைஞர் ...வது ஆண்டுப் ...ட்டம் அண்மை ... அ. புவனேசன் ... நடைபெற்ற ...ன்வருவோர் திர் ...தெரிவுசெய் ...ர்.

... திரு. இ. இராம ...தலைவர்கள் திரு. ...னிப்பிள்ளை, திரு ...ம், செயலாளர் ...கனகரத்தினம், ...லாளர் திரு. ...ம் பொருளாளர் ...திரன். ...ழு உறுப்பினர் ...யர் தெரிவு செய் ...ர். (ந)

## கிழக்கிலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர்சங்கம்

திருகோணமலை, திங்கள் "நகரசுத்தித்தொழிலாளர் கள் இந்த நாட்டின் கண்க ளைப்போன்றவர்கள். அவர் கள் ஆற்றும்பணி நமக்குத் தேவைமட்டுமல்ல, மகத்தா னதும் கூட. அவர்களது சமூ கமதை ஒதுக்கிவாழ்வது வெட்கத்துக்குரியதுடன் வேதனைக்குரிய விடயமாகும். நமது நாட்டில் பரவிய கொள்ளை நோயைத் தங்கள் அரும்பெரும் சேவையினால் தடுத்து நிறுத்திய டாக்டர் களே அவர்கள்தான் என்றால் அது மிகையாகாது. நாம் சுகாதாரத்தோடு ஒழுங்காக வாழவேண்டுமானால் அவர் களது ஒத்துழைப்புக் கண்டிப் பாக எமக்குத்தேவை. இப் படிப்பட்ட பணம் வாய்ந்த சமூகத்தை ஒன்றுதிரட்டும் பணியில் அயராது ஈடுபட்டி ருக்கும் ஏ. நிச்சட், எஸ். ஜே.யை நாம் இந்தச் சந்தர்ப் பத்தில் பாராட்டாமல் இருக் கமுடியவில்லை. தன்னலம் சிறி தும் இன்றி அவர் செய்யும் சேவை என்றும் வாழவேண் டும், வளரவேண்டும்".

இவ்வாறு கிழக்கிலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியா கக் கலந்துகொண்ட திருக் கோணமலை உதவி அரசாங்க அதிபர் திரு. சிசில் வியனகே கூறினார்.

விழாவின் பின்னர் நடந்த வருடாந்தக் கூட்டத்தில் கீழ் வருவோர் நடப்பு வருடத் தின் உத்தியோகத்தர்களா கத் தெரிவு செய்யப்பட்ட னர்.

தலைவர்: திரு. கார்மேகம், உபதலைவர்கள்: திருவாளர் கள்: பி. முனியாண்டி, காளி முத்து, எஸ். அழகி. பொதுச் செயலாளர்; வண சகோதரர் ஏ. நிச்சட், எஸ்.ஜே. உப செயலாளர்: திரு. ஜே. இ. அ. அல்பேஸ். பொருளாளர் திரு. வி. மாணிக்கம். செயற் குழு வொன்றும் தெரிவு செய் யப்பட்டது. (ந)

## நல்லூரில் புதிய சந்தை

நல்லூர், திங்கள் நல்லூர்கந்தசுவாமிகோவில் உற்சவ காலங்களில் இயங்கி வந்த சந்தையில் இம்முறை வெட்டி, பாய் பானை ஆகிய பொருட்களை மாத்திரமே விற் பனை செய்ய அனுமதி வழங் கப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை வீதியில் அமைக்கப்படவிருக்கும்புதிய சந்தையில் மரக்கறி போன்ற பொருட்கள்விற்பனைக்குஇருக் கும். இங்கு அமைக்கப்பட விருக்கும் தற்காலிக கடை களை வாடகைக்கு விடவும் ஒழுங்குகள் நடைபெறுகின் றன. (ந)

# கிணற்றில் தவறி விழுந்து பணிப்பெண் மரணம்

மீசாலை, திங்கள் சுமார் 14 வயதுடைய பணிப்பெண் ஒருவர் கிணற் றுள் தண்ணீர் அள்ளும் போது தவறிவிழுந்து மரண மடைந்தார்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த ஒருவரின் பணிப் பெண்ணை மலைநாட்டைச் சேர்ந்த பக்கிரி சுப்பையா வின் மகளான வள்ளியின் மரணவிசாரணையில் மேற் கண்ட விபரம் தெரியவந் தது. சாவகச்சேரி மரணவிசா ரணை அதிகாரி திரு. வி. பால கிருஷ்ணன் மரணவிசாரணை நடத்தினார். வைத்திய அதி காரி டாக்டர் டி. வி. பேரின்ப நாயகமும் சாட்சியமளித்த பின் விபத்து மரணமென தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# இடமாற்றத்தின்போது இவர்களுக்கு முதலிடம்!

மீசாலை, திங்கள் யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 11-வது ஆண்டு பொதுக் கூட் டம் யாழ். கிறிஸ்தவ வாலி பர் சங்கமண்டபத்தில் திரு. கே. எஸ். சோமசுந்தரம் தலை மையில் நடைபெற்றது.

தலைவர் சங்கமுன்னேற்றத் திற்காக அனைவரையும் ஒத்து ழைக்கும்படி வேண்டினார். கஷ்டமான பகுதிகளில் கட மையாற்றும் கிராம சேவ கர்கள் இருவருடம் முடிந்து மாற்றத்திற்கு விண்ணப்பம் செய்தால் அவர்கட்கு முதலி டம் கொடுக்க வேண்டுமென் றும் இவர்களுக்கு வீட்டுவசதி கந்தோர் வசதி அரசாங்க செலவில் ஏற்படுத்திக் கொடு க்க வேண்டுமென்றும் தீர்மா னங்கள் நிறைவேறின.

புதுவருடத்தலைவராக திரு. கே. எஸ். சோமசுந்தரமும் காரியதரிசியாக திரு. ஏ. நடராசாவும் தனாதிகாரியாக திரு. ரி. கமலநாதன் என்ப வர்களுடன் பத்தொன்பது நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## இன்று ஆரம்பம்

மீசாலை, செவ்வாய் ஊரலி சந்திரோதயமை யோர் ஆலய வருடாந்த நவ நாள்விழா இன்று ஆரம்பமா கிறது. 24-ம் திகதி விசேஷ ஆராதனையும் தேர்பவனியும் நடைபெறும். 25-ம் திகதி காலை பாடற்பூசையுடன் விழாமுடிவடையும். (அ)

## துப்பாக்கிக்கு இளைஞர் பலி!

வவனியா, திங்கள் தியேட்டரில் பணிபுரியும் வாலிபர் ஒருவர் இரண்டாம் காட்சியின் இடைவேளையின் போது வீட்டுக்குச்சென்று உணவருந்தி விட்டு திரும்பு கையில் துப்பாக்கிச்சூட்டுக் குப் பலியானார்.

வவனியா குடியிருப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மபுத திரன் என்னும் 24 வயது வாலிபரே துப்பாக்கிச்சூட்டுக் குப் பலியானார்.

துப்பாக்கிச்சூட்டு காயங்க ளுடன் வவனியா ஆஸ்பத்திரி யிலும் பின்னர் அனுராத புரம் ஆஸ்பத்திரியிலும் அனு மதிக்கப்பட்டு, இளைஞன் அங்கு காலமானார்.

காணித்தகராறே இக் கொலைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. வாலிபரின் உறவினர் ஒருவரை பொலி சார் தேடிவருகின்றனர்.


வெள்ளி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
அரசகட்டளை

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா?

நாகம்மாள் [கன்னாகம்]
தினசரி 6-30, 9-30
ஜெமினி - அஞ்சலிதேவி
மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Antony Quinn.
Inger Steven
in
A DREAM OF KINGS
(color)

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6.15, 9.45
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி


# "ரஷ்யாவில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்"

சுழிபுரம், திங்கள் "உலக சிந்தனையாளர்களின் எண்ணங்களில் உதயமாகிய கல்விமுறை யாவும் ஒன்று களேயுள்ளன. அறிஞர் சோக் கிரட்டீஸ் முதல் மகான் காந்தி வரை கூறிய கல்வி அமைப்பு ஒன்றாகவே அமைந்துள்ளது. நாடுகள் வேறாகவும், கொள் கைகள் வேறாகவுமிருந்தா லும் சிந்தனை அமைப்பு ஒன்று கவேயுள்ளது.'

இவ்வாறு வட்டுக்கோட்டை வட்டார ஆசிரியர் புத்தூக்க வகுப்பில் கலந்துகொண்டு வெளிநாட்டுக் கல்விமுறை கள் என்னும் விஷயம் பற்றி உரையாற்றிய இளைப்பாறிய யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு என். சபாரத்தினம் குறிப்பிட்டார்.

பண்ணாகம் மெய்கண் டான் பாடசாலை மண்டபத் தில் நடைபெற்ற இப்புத் தூக்க வகுப்புக்கு சுழிபுரம் ஆறுமுகம் வித்தியாசாலை அதிபர் திரு. என். விருத்தா சலம் தலைமைவகித்தார்.

திரு. என். சபாரத்தினம் (4-ம் பக்கம் பார்க்க)


ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த
பிரேமபாசம்
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00, 4-45, 7-15, 9-45
ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்
SECRET FOREST OF AFRICA
(கலர்)

ராணி [யாழ்ப்பாணம்]
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
முத்துராமன் - நம்பியார்
தினசரி 4 காட்சிகள்
ஒரு தாய் மக்கள்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
மகத்தான 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
சுந்தரராஜன்
மனோகர்
வாயாடி

2-வது ஜனத்திரள் மாதம்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
நம்பியார் - முத்துராமன்
நடித்த
பொன்னூஞ்சல்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30 மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல,
முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவளா ஒரு பாவை
... — அவன்தான்.....
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார் நடித்த
தலாஷ் (TALASH)
(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்திச் சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஞானம் ஒற்றுமைக்கு இட்டுச் செல்கிறது. அஞ்ஞானம் பல்வேறுபட்ட நிலைக்கு வழி செய்கிறது.
—ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஈழநாடு
EELA NADU
16 - 7 - 74

## வேலைக்காரச் சிறுவர்கள்

'மக்கள் தாமே ஆறறிவுயிரே மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்பது பழைய வாசகம். இந்த நாட்டில் ஐயறிவினர் செய்யும் கொடுமைகளில் வேலைக்காரச் சிறுவர்களை சித்திரவதை செய்வது மிகமோசமானது.

இதையிட்டு மிகக் கவலை கொண்டவர் இலங்கையின் முதலாவது பெண் நீதவான் திருமதி சுதர்ம தர்மதாஸ. சிறுவர் வழக்கு விசாரணையில் ஓர் ஆறு வயது வேலைக்காரச் சிறுவனின் உடம்பில் காணப்பட்ட பல காயங்கள் காரணமாக நடந்த விசாரணையில், ஒன்றுமறியாத பல குழந்தைகள் இவ்வாறு கொடுமைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆறுவயதுக்குழந்தையை வீட்டுவேலைக்காரனாகவைத்திருக்க சட்டம் இடம்கொடுக்குமா?

குறித்த சிறுவன் தோட்டத்தொழிலாளி ஒருவரின் மகனென்று தெரிவிக்கப்பட்டது. இன்று நாட்டின் பலபாகங்களிலும் இவ்வித சிறுவர்கள் வீடுகளிலே வேலைக்காரர்களாகவிருப்பது பகிரங்க ரகசியம். இவர்களைப் பொறுத்தளவில் சட்டம் சரியாக அமுல் நடத்தப்படுகின்றதா என்பது சந்தேகம்.

நாட்டிலே ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தால் நலிந்தும் - மெலிந்தும், வீதிவீதியாய் அலைந்தும், தேவாரற்ற நிலையில் காணப்படும் தோட்டத்தொழிலாளிகள் பட்டினிநிலையில் தங்கள் பிள்ளைகளை இக்கதிக்குள்ளாக்கவேண்டியது தவிர்க்க முடியாத நிலையெனத் தெரிகிறது.

பாடசாலைபோகாதபாலகர்கள் வீதிகளிலே கையேந்தி பிச்சையெடுப்பதிலும் பார்க்க வசதிபடைத்தவர்கள் வீடுகளில் வேலைக்காரர்களாக இருந்தாவது தன் வயிறு வளர்க்க வாய்ப்பிருப்பது பெருங்காரியம்.

இந்த நிலைமையைத் தவறாகப் பயன்படுத்துவது சட்டவிரோதமானதுமட்டுமல்ல அதர்மச்செயலுமாகும். சிறுவர்கள் யாருக்குமே இக்கொடியநிலை ஏற்படாமல் தடுப்பது அரசின் பொறுப்பாகும். தோட்டத் தொழிலாளிகளின் பிரச்சினை மனிதாபிமான முறையில் தீர்க்கப்பட்டால் இச்சிறுவர்கள் இவ்வித கொடுமைகளிலிருந்து தப்பமுடியும்.

அது நீண்டகாலப் பிரச்சினையென்று கருதி அதனை தட்டிக்கழித்துவிடாமல் இச்சிறுவர்கள்படும் பாட்டுக்கு முடிவுகாண விசேஷ நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

நாடற்றவர்கள், நாடற்றவர்களின்பிள்ளைகள்என்ற அடிப்படையில், ஆறறிவுயிர்கள் தங்கள் மனிதாபிமானத்தை இழந்து, கேட்பதற்காளில்லையென்ற காரணத்தால், அடிமைகளுக்குத்தானுமுள்ள உரிமை கூட மறுத்து அப்பாவிக் குழந்தைகளுக்கு கொடுமை செய்வதை சட்டத்தால் தடுக்கவேண்டியது அவசியம்.

இங்கே பசியும் பட்டினியும் நோயுமின்றி எத்தனையினும் மனிதனைப்போல வாழும் வாய்ப்பை, இந்தியாவுக்குத் திரும்பவிருக்கும் இந்திய வம்சாவழியினர்க்கும் வழங்கவேண்டும். இவர்களின் பிள்ளைகளை அநாதைகளெனக் கணித்தால் வேலைக்காரச் சிறுவர்கள் படும் கொடுமைகள் நீடிக்குமென்பது தெளிவு. இது அரசியல் தர்மத்துக்கு அறவே மாறாகும்

# பட்டதாரி மாணவர்களை தெரிவதில் புதுமுறை?

கொழும்பு, திங்கள்

தேசிய சான்றிதழ் உயர்தரப் பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 7 பாடங்களை எடுக்கவேண்டும் என்றும் இதில் நான்கு பாடங்கள் கட்டாயமாக்கப்படவேண்டும் என்றும் இது பற்றி ஆராய்ந்த உயர் குழுவொன்று சிபார்சு செய்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் பிரேமதாஸ உடகம தலைமையிலான இக்குழு செய்துள்ள சிபார்சுகளின் மீது பல்கலைக்கழகங்களுக்கு பட்டதாரி மாணவர்களைத் தெரிந்தெடுப்பதிலும் உயர் கல்வி நிலையங்களுக்கு மாணவர்களைத் தெரியும் முறையிலும் தீவிர மாற்றங்கள் கொண்டுவரப்படலாம் என்று தெரிகின்றது.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளை வைத்தே இப்போது பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுவருகிறார்கள்.

க. பொ. த. பத்திர உயர்தரப் பரீட்சை 1977-ம் ஆண்டு முதல் நீக்கப்பட்டு அதற்குப் பதில் தேசிய சான்றிதழ் உயர்தரபொதுப் பரீட்சை நடைபெறவிருக்கிறது. இருந்தபோதிலும் பழைய பாடத்திட்டங்களின் கீழ் கல்விபயின்ற மாணவர்களுக்காக க. பொ. த. பத்திர [சாதாரண] பரீட்சையும், கல்விப்பொதுத்தராதரப் பத்திர [உயர்தர] பரீட்சையும் தொடர்ந்து சில காலத்துக்கு நடத்தப்பட்டுவரும் என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழு தெரிவித்துள்ள சிபார்சுகளின்படி தே. சா. பொ. உயர் கல்வியின் முதல் பகுதியில் 4 பாடங்கள் கட்டாயமாகவிருக்கும் இரண்டாம் பாகம் விசேஷ பாடத்திட்டத்தைக் கொண்டதாகவிருக்கும் கல்வி போதனைக்கான நேரத்தில் 25 வீதத்தை கட்டாய பாடங்களுக்காக ஒதுக்க வேண்டுமென்றும் விசேஷ பாடத்திட்டத்திற்காக 75 வீத நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## சிரமதான மூலம் கிணறு தோண்டுவர்

நல்லூர் திங்கள்

திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கிணறு ஒன்று தோண்டப்படவுள்ளது. இவ்விளையாட்டு மைதானத்தில் விவசாயத்தை மேற்கொள்ளும் பொருட்டு இக்கிணறு தோண்டப்பட விருப்பதாகக் கல்லூரி அதிபர் திரு. இ. பொன்னம்பலம் தெரிவித்தார்.

மாணவர்களிடையே விவசாயத்தை ஒரு பாடமாக இங்குகற்பித்து வருவதாகவும் இதனைச் செய்கைமுறையில் பயிற்சி அளிப்பதற்கு மேற்படி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் ஒருபகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பயிர்ச்செய்கையில் அவர்களை ஈடுபடுத்தவும் இதன் உபயோகங்களுக்காக இக்கிணறு தோண்டப்பட விருப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். இக்கிணறு ஆசிரிய மாணவர்களினால் சிரமதான அடிப்படையில் தோண்டப்படவுள்ளது. (அ)

## ரஷ்யாவில்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'ஆசிரியனின் பணி மகத்தானது ரஷ்ய நாட்டில் ஆசிரியனுக்குத் தகுந்த கௌரவம் அளிக்கப்படுகிறது. ஆசிரியனும் தனக்கு அளிக்கப்படும் மதிப்புக்குத் தகுதியாக நடந்துகொள்கின்றான். இந்த நாட்டில் ஓர் ஆசிரியனாகப் பணியாற்றிய நான் மீண்டும் பிறப்பதானால் ரஷ்ய நாட்டில் ஓர் ஆசிரியனாகவே பிறக்க விரும்புவேன்.

ரஷ்யாவில் ஆங்கிலம் பேணப்பட்டு வருகிறது உலகின் எந்தப் பகுதியிலும் நிகழும் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை ஆங்கிலத்தில் அறிந்து கொள்ளவும் தமது கண்டுபிடிப்புகளை உலகங்களுக்கு தெரியப்படுத்தவும் ஆங்கிலத்திற்குரஷ்யாவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ம. சச்சிதானந்தன், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் ஆகியோரும் பேசினர். (அ)

## சைப்பிரஸில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. முதலாவது ஜனாதிபதியாக ஆர்ச் பிஷப் மக்காரியாஸ் பொறுப்பேற்றார். 60-ம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்தில் தலைமைப்பங்கு வகித்த இவர் மீண்டும் 68ல் ஜனாதிபதியானார். தற்போது மக்காரியஸுக்கு 60 வயது பூர்த்தியாகியுள்ளது.

......

## 102ல் மரணம்

அரியாலை, திங்கள்

அரியாலையைச் சேர்ந்த ச. பார்வதி என்ற பெண் தனது 102 வது வயதில் மரணமானார். (அ)

......

## 'வெள்ளிவிழா ஒருதமிழ் விழா'

யாழ்ப்பாணம், செவ்.

'யாழ். மாநகரசபை தனது சேவையை ஆற்றத் தொடங்கி 25 வருடமாகின்றது. இதன் 25 வருட பூர்த்தியையிட்டு நாம் வெள்ளி விழாவினை எடுத்துள்ளோம். இவ் வெள்ளி விழா உண்மையில் ஒரு தமிழ் விழாவாகும்.'

நேற்று முன்தினம் இரவு யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியின் போது உரையாற்றுகையில் யாழ். மாநகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதல்வர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மகாத்மா காந்தி, ஔவையார், திருவள்ளுவர் ஆகியோருக்கு இவ்விழாவையிட்டு சிலைகள் வைக்கப்பட்டுள்ளது. சோமசுந்தரப் புலவர், சேர் பொன் இராமநாதன் போன்ற தமிழ் தலைவர்கள், அறிஞர்களுக்குச் சிலை அமைக்கவுள்ளோம். எனவே மாநகர சபை வெள்ளிவிழா ஓர் தமிழ் விழாவாகும். (த-ச)

# ஜயமரன் எழுதுவது..

உத்தர பிரதேசத்திலே தயாள் பாக்கிலிருந்து ஒரு சுவாமி யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். பெயர் கிருஷ்ணானந்த. இலங்கையைச் சேர்ந்த அவர், தயாள்பாக் ஆசிரமத்தில் ஐந்து ஆண்டுகள் தங்கி பயிற்சி பெற்றுள்ளதாகவும் அங்கு ஒரு குருவின் தலைமையில் பல குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும் நடைப்பதாகவும் 5000 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள அந்த ஆசிரமத்தில் ஐயாயிரம்பேர் வசிப்பதாகவும் குருபரம்பரையின் ஆத்ம சக்தியே இந்தப் பெரிய ஆசிரமத்தை வெற்றிகரமாக இயக்கிவருவதாகவும் அந்த மாதிரி ஒரு ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும் அப்படி ஏற்பட்டால் இங்குள்ள மக்களின் பலகஷ்டங்கள் தீருமென்றும் சொன்னார்.

தயாள்பாக் ஆசிரமம் நடக்கிற விதத்தையும், யாழ்ப்பாணத்திலே அந்த முறையில் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதைக் குறித்தும் சீக்கிரத்தில் அவர் ஒரு கூட்டம் கூடி யோசிக்க இருப்பதாகத் தெரிகிறது. அவர் இலங்கையில் அரசாங்க சேவையில் இருந்து இளவயதிலேயே ஓய்வு பெற்றவர். பிரம்மச்சாரி. தம் வாழ்க்கையையே சமூகத்துக்காக அர்ப்பணித்துள்ள இந்தத் தியாக புருஷர், ஒரு கர்மவீரர் வெறும் வாய் வேதாந்தியல்ல. அவர் தலைமையில் ஒரு பலத்த கைத்தொழில் ஆசிரமம் ஏற்பட திருவருளும் குருவருளும் கூட்டுமாக.

0 0 0

சென்ற ஞாயிறன்று அவருடனும் வேறு சில அன்பர்களுடனும் புங்குடுதீவுக்குச் சென்றோம். அங்கு வடமாகாண சர்வோதய ஸ்தாபனத்தின் நல்ல பணிகள் நடப்பதாக அறிந்து அதை நேரில் பார்க்கப் போனோம்.

வழியிலே ஓர் இடத்தில் மரத்தடியிலே பல வாலிபர்கள் உட்கார்ந்திருந்தனர். 'இளைஞர் மது ஒழிப்புச்சங்கம் - புங்குடுதீவு உண்ணாவிரதம்' என்று எழுதிய விளம்பரங்களையும் குடியால் ஏற்படும் தீங்குகளைப்பற்றிய சுலோக அட்டைகளையும் பார்க்க வியப்பாக இருந்தது. அங்கு அவர்களை அணுகி விசாரித்தோம்.

சென்ற ஜனவரியில் இந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டதாம். இரண்டு கிழமைக்கு ஒருமுறை ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 முதல் மாலை வரை உண்ணாவிரதம் இருந்து குடியின் கேடுகளை மக்களுக்கு உணர்த்தி மதுஅரக்கனின் பிடியிலிருந்து விடுதலைபெறச் செய்வதே இதன் நோக்கமென்று தெரிவித்தனர்.

இது மிக நல்ல இலக்கம். இதில் ஈடுபட்டு தவம் கிடக்கும் வாலியர்களைப் பாராட்டி அவர்களுக்குக் கூடிய ஆதரவு அளிக்க வேண்டியது பொது மக்கள் கடமை. வியாதி மிக முற்றிவிட்டது. குடிப்பழக்கம் இங்கு வேரூன்றியுள்ளது. கடற்பாறை விழுங்கியவனுக்கு சுக்குக் கஷாயம் கொடுப்பது போதாது. இந்த இயக்கத்தைப் பெரிதும் பலப்படுத்த வேண்டும். பெண்கள் இதில் விசேஷமாக ஈடுபட வேண்டும். இங்கு தமிழ்மக்கள் உருப்பட்டு தலைதூக்க வேண்டுமானால் அவர்களை இந்த அரக்கனிடமிருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம். அரசியல் கட்சிகளோ, தலைவர்களோ இதில் ஈடுபட இன்னும் முன்வராது தயங்குவது பெரிய துரதிருஷ்டம். அரசாங்கமோ, மற்ற அரசியல் கட்சிகளோ இதில் கண்முடித்தனமாக இருப்பதால் மக்கள் சிறப்பாக வாலிபர்களும் பெண்களும் இதில் தீவிரமாக ஈடுபட வேண்டிய அவசியம் அதிகமாக உள்ளது.

தமிழகத்தில் எம். ஜி. ஆர். மதுவிலக்குக் கொள்கை அடிப்படையில் திண்டுக்கல் தேர்தலில் அமோக வெற்றி பெற்றபின், தி. மு. கவும் தன் மனப்போக்கை மாற்றி மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது. ஆகவே இங்கு அரசியல் தலைவர்கள் இது பற்றி தயங்கத்தேவையில்லை.

இப்போது பனம்வெல்லம், சீனி முதலியவற்றுக்கு நல்ல விலை கிடைப்பதால், பதநீரை கள்ளுக்காக அன்றி வெல்லம் முதலியவற்றைச் செய்ய தமிழ்த் தலைவர்கள் ஏன் முனையக்கூடாது. இவ்வித உருப்படியான ஆக்கப் பணிகளே மக்களுக்கு இன்று தேவை. செய்வார்களா?

0 0 0

புங்குடுதீவில் சர்வோதய சங்கத்துக்குச் சென்றோம் அங்கு குழந்தைகளுக்கு கல்வி அளிக்கப்படுவதுடன், அழகான பட்டிக்சித்திரவேலைப் பாடுடன் கூடிய கைப்பணி நடந்துவருவதையும் பல பெண்மணிகள் இதில் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளதையும் கண்டோம். இந்தத் துணிகளுக்கு, வெளிநாடுகளில் அதிக கிராக்கியுள்ளதாம்.

இன்னும் சிரமதான வேலைகள் நடப்பதாகவும், மழைநீரை வீணாக்காமல், ஆங்காங்கே தேங்கவைக்க பூமியை ஆழமாக வெட்டும் பணியில் வாலிபர்கள் பலர் ஈடுபட்டுள்ளதாகவும் அறிந்தேன். இதுபோன்ற ஆக்கப் பணிகள் ஓங்குக! சர்வோதயம் வாழ்க!

......

## வயோதிபர் சுருக்கிட்டுத் தற்கொலை

மாவிட்டபுரம், திங்கள்

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நோயின் கொடுமை தாங்காது தற்கொலை செய்துகொண்டார்.

மயிலிட்டி தெற்கு கட்டுவனைச்சேர்ந்த தில்லையம்பலம் சீனிவாசகம் (75 வயது)என்பவரின் மரணவிசாரணையில் இவ் விபரம் தெரியவந்தது.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு இ. பாலசுப்பிரமணியம் விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது காலமானவரின் மனைவி ஏற்கனவே இறந்து விட்டதாகவும், மூத்தமகளுடனேயே அவர் வசித்து வந்ததாகவும், நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் நோயின் கொடுமையால் பலமுறை தற்கொலை செய்யப் போவதாகக் கூறியதாகவும், சம்பவதினம் அவரது பேத்தியான உமா அவருக்கு பால் கொண்டுசென்றபோது வீட்டின் கூரையில் அவர் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், அப்போது அவருக்கு உயிர் இருந்தபோதும் தன்னை காப்பாற்றவேண்டாமென அவர் கூறியதாகவும், பின்னர் மரணமடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கிய மரண விசாரணை அதிகாரி "நோய்வாய்ப்பட்ட வயோதிபரான காலமானவரை சரிவர பேணிக்காக்காததால் அவர் காலமாகவேண்டி ஏற்பட்டது. இதற்கு காரணம் இவரைப்பராமரித்தவர்களே" என அவர்களை எச்சரித்தார். (ஈ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளைவில் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19[illegible] ஆண்டு [illegible] 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box No. 49, Jaffna. [illegible]
'Eelanaadu' Telephone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org